**<u>நீதித்துறை நடுவர் எண்.1நீதிமன்றம், இராமநாதபுரம்</u>**

**முன்னிலை : திரு.N. நிலவேஸ்வரன், B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்.1 இராமநாதபுரம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் திங்கட்கிழமை**

<u>CIS. Crl.M.P.No.243/2026</u>

<u>CNR No. TNRM 02-000699-2026</u>

G. ராஜலிங்கம்,
த/பெ. குணசேகரன்,
1/86, MSK நகர்,
இராமநாதபுரம்.

. . . மனுதாரர் / எதிரி

-- எதிராக --

அரசுக்காக வனச்சரக அலுவலர்,
R.S, மங்கலம் வனச்சரகம்,
WLOR No: 01/2025

. . . எதிர்மனுதாரர் / அரசு
குற்றமுறையிடுபவர்

மனுதாரர்/எதிரி தரப்பில் BNSS பிரிவு 497 மற்றும் 503-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு 02.03.2026-ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. வடிவேல் மாரிமுத்து அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/அரசு குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும். . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது R.S, மங்கலம் வனச்சரகம் WLOR No: 01/2025-ல், வன உயிரின பாதுகாப்புச்சட்டம் 1972 பிரிவு 2(32) பிரிவு 39(1)(b), 39(1)(d), 39(1)(d)(5), பிரிவு

40, 42, 43, 44, பிரிவு 49 B அட்டவணை– I, பிரிவு 50, 51(1), 52, 57 ன் கீழான வழக்கில், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான Vivo Y25 என்ற செல்போன் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற பொறுப்பில் ஒப்படைக்காமல் இருந்து வருகிறது என்றும், மேற்படி செல்போனை ஒப்படைத்து, இடைக்கால பொறுப்பில் வழங்ககோரி இம்மனு மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர்/ எதிரி தரப்பு மனு மற்றும் வாதம் :–</u>

மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவிலும், Vivo Y25 என்ற செல்போன் மனுதாரருக்கு சொந்தமானது ஆகும். மனுதாரர் மேற்கண்ட குற்றத்தில் 5 வது குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார். இது பிரதிவாதி காவல்துறையால் வன உயிரின பாதுகாப்புச்சட்டம் 1972 பிரிவு 2(32) பிரிவு 39(1)(b), 39(1)(d), 39(1)(d)(5), பிரிவு 40, 42, 43, 44, பிரிவு 49 B அட்டவணை– I, பிரிவு 50, 51(1), 52, 57 ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கைது செய்யப்பட்டு 13.02.2025 அன்று வனரேஞ்சர் இராமநாதபுரத்தில் FIR பதிவு செய்யப்பட்டது. இந்த FIR இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.1 ல் நிலுவையில் உள்ளது. அதன் பிறகு மனுதாரர் நீதிமன்றக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். பின்னர் மனுதாரர் இந்த மாண்புமிகு நீதிமன்றத்தால் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நேரத்தில் பிரதிவாதி காவல்துறையினர் மனுதாரரிடமிருந்து சுமார் ரூ.25,000/– மதிப்புள்ள ஒரு Vivo Y25 செல்போனை மீட்டனர். அது இப்போது வழக்குச்சொத்தாக இந்த மாண்புமிகு நீதிமன்றத்தின் காவலில் உள்ளது. மேற்படி வழக்குச்சொத்தான செல்போனானது எந்தவொரு கடத்தல் பொருளாகவும் இல்லை. குற்றம் நடந்ததாகக் கூறப்படும் சம்பவத்துடன் நேரடியாக தொடர்புடையது அல்ல. மனுதாரர் தனது அன்றாட வாழ்வாதாரம் மற்றும் தகவல் தொடர்புக்கு அந்த செல்போனைச் சார்ந்திருக்கிறார் என்றும், மேலும் அதைத் திருப்பித் தராவிட்டால் மனுதாரருக்கு கடுமையான நிதி நெருக்கடி மற்றும் சிரமம் ஏற்படும் என்றும், மனுதாரர் இந்த நீதிமன்றத்தால் தேவைப்படும் போது அந்த செல்போனைக் காட்டுவதாக உறுதியளிப்பதாகவும், மேலும் அதை எந்த வகையிலும் சேதப்படுத்தவோ அல்லது தவறாகப் பயன்படுத்தவோ மாட்டேன் என்று உறுதியளிப்பதாகவும், மேற்படி மொபைல்போனை மனுதாரரின் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடும் பட்சத்தில் சமூக நீதிமன்றம் பிறப்பிக்கும் நிபந்தனைகளை நிறைவேற்ற மனுதாரர்

தயாராக உள்ளார் என்றும், செல்போனை தொடர்ந்து வைத்திருப்பது எந்தவொரு பயனுள்ள நோக்கத்திற்கும் உதவாது என்றும், தனது வழக்குச்சொத்தை தனது பொறுப்பில் இடைக்காலமாக ஒப்படைக்க குற்றமுறையீடுவோருக்கு எவ்வித ஆட்சேபனையும் இருக்காது என்றும், எனவே மேற்படி வழக்குச்சொத்தை இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து பின்பு மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

**எதிர்மனுதாரர்/அரசுத்தரப்பு பதிலுரையின் சுருக்கம் மற்றும் வாதம்:–**

இந்த மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் பேரில் எதிர்மனுதாரர்/அரசுத்தரப்பில் அறிவிப்பு கோரப்பட்டது. அந்த பதிலுரையில் WLOR No: 01/2025 ல் சம்பந்தப்பட்ட எதிரி ராஜலிங்கம் S/o.குணசேகரன் என்பவரின் செல்போனானது WLOR No: 01/2025 ல் பிடிபொருளாக PR.No: 66/2026 தேதி.21/02/2025 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் முக்கிய பிடிபொருளான திமிங்கல எச்சம் (Amber gris) பகுப்பாய்விற்காக சென்னை AIWC ஆய்வுக்கூடத்தில் 22.01.2026 ம் தேதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முடிவறிக்கை வராததால் வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் பிடிபொருளான செல்போனை எதிரி வசம் திருப்பி கொடுக்க வேண்டாம் என ஆட்சேபனை தெரிவிப்பதாக அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தீர்வு :–**

I) இம்மனுவில் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்குக்கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது. மேலும் மனுதாரர் தரப்பில் செல்போன் Tax Invoice நகல் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி நகலினை வைத்துக்கொண்டு எத்தகைய முடிவிற்கும் வர இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரரின் வழக்குச் சொத்தின் உரிமைத்தன்மை பற்றி அறிந்துகொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

ii) மேலும் வழக்குச்சொத்தினை குறித்து அரசு தரப்பில் இந்த வழக்கின் முக்கிய பிடிபொருளான திமிங்கல எச்சம் (Amber gris) பகுப்பாய்விற்காக சென்னை AIWC ஆய்வுக்கூடத்தில் 22.01.2026 ம் தேதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முடிவறிக்கை

வராததால் வழக்கு நிலுவையில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது புலன் விசாரணையானது நிலுவையில் உள்ளது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

iii) மேலும் அரசு தரப்பு வாதத்தின்போது மேற்படி வழக்குச்சொத்தான செல்போனை பகுப்பாய்விற்கு உட்படுத்த வேண்டியது அவசியமென்று வாதிடப்பட்டது. தற்போது புலன் விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் மேற்படி வழக்குச்சொத்தானது புலன் விசாரணைக்கு அவசியம் தேவைப்படுகிறது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

iv) மேற்கண்ட நீதிமன்ற பரிசீலனையின் அடிப்படையிலும் மனுதாரரின் உரிமைத்தன்மை பற்றி அறிந்துகொள்ள இயலாத நிலையிலும் மனுதாரரின் மனு பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

v) முடிவாக மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இன்று 2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23–ஆம் நாள் இவ்வுத்தரவு என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

N NILAVESHWARAN

Digitally signed by N NILAVESHWARAN
Date: 2026.03.23 17:34:32 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்.